பக்கங்கள் 06

10/=

எதிரொலி
Ethiroli

குரல் 01 அதிர்வு 96 சனிக்கிழமை ஒகஸ்ட் 19 2017 ethirolimedia@gmail.com 021 300 48 48

# சு.க. - ஐ.தே.மு. சந்திப்பு நாளை

ஐக்கிய தேசிய முன்னணியில் அங்கம்வகிக்கும் கட்சித் தலைவர்கள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினரைச் சந்திக்கவுள்ளனர். இச் சந்திப்பு நாளை இரவு 9 மணிக்கு நடைபெறும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. மாகாண சபைகளுக்கு ஒரேதினத்தில் தேர்தலை நடத்தும் 20 ஆவது திருத்தத்துக்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி எதிர்ப்பு வெளியிட் 06



# பிரபாகரனுடன் ரகசியச் சந்திப்பு

## எரிக்சொல்ஹெய்ம் தகவல்



“பிரபாகரனை முதல்தடவையாகச் சந்திப்பதற்கு நான் சென்றிருந்த போது, இலங்கையில் யாருமே அதனை அறிந்திருக்கவில்லை. இலங்கைப் பிரதமருக்குக் கூட அது தெரியாது. அந்தளவுக்கு மிக இரகசியமாகவே அந்தச் சந்திப்பு அமைந்தது.” என்று விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனை, தான் முதலில் சந்தித்த அனுபவத்தை விவரித்துள்ளார் இலங்கைக்கான நோர்வேயின் முன்னாள் சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம்.

விடுதலைப் புலிகளைப் பற்றியும் புலிகளின் தலைவர் பற்றியும் சர்வதேச ஊடகம் ஒன்றுக்கு அளித்துள்ள செவ்வியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

“ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனை நான் முதன்முதலில் சந்திக்கச்சென்றபோது அதுமிக இரகசியமாகவே வைக்கப்பட்டிருந்தது. பிரபாகரனைச்சந்திப்பதற்கான அனுமதியை அப்போதைய 06

# இந்தியப்படைக்கு இன்று அஞ்சலி



இந்திய இராணுவம் யாழ்ப்பாணத்தில் நிலைகொண்டிருந்தபோது இங்கு பணியாற்றிய இராணுவ வீரர் ஒருவர் தற்போது இந்தியாவின் தென் மண்டல இராணுவத் தளபதியாக உள்ளார். அவர் தலைமையிலான இந்திய இராணுவ அதிகாரிகள் குழு இலங்கை வந்துள்ளது. அவர்கள் கல்வியங்காட்டில் உள்ள இந்திய இராணுவத்தின் நினைவுத் தூபியில் இன்று அஞ்சலி செலுத் 06

## சாவகச்சேரியில் வயோதிபர்

# டிப்பர் மோதி சாவு!



யாழ்.சாவகச்சேரி ஏ-9 வீதியில் பஸ் நிலையத்துக்கு முன்பாக டிப்பர் வாகனமும் துவிச்சக்கர வண்டியும் மோதுண்டதில் வயோதிபர் உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் இன்று காலை 6.45 மணியளவில் இடம்பெற்றதாக சாவகச்சேரிப் பொலிஸார் தெரிவித்தனர். குறித்த வயோதிபர் தேங்காயை விற்பனை செய்வதற்காக சாவகச்சேரி சந்தைக்குக் கொண்டுசென்றபோதே இவ்விபத்து 06




கேப்பாபிலவை விடுவிக்க

# படையினர் பேரம் அமைச்சு இணக்கம்

கேப்பாபிலவு காணிகளை விடுவிப்பதற்கு இராணுவத்தினர் கேட்கும் நிதியை வழங்கி காணிகளை விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுவருவதாக மீள்குடியேற்ற அமைச்சு தகவல் வெளியிட்டுள்ளது. குறித்த கேப்பாபிலவு காணிகளை விட்டு வெளியேறி வேறு இடத்தில் இராணுவ முகாம்களை அமைப்பதற்கு நிதி தேவைப்படுவதாகவும் அதற்கென 148 மில்லியன் ரூபா நிதி வழங்கவேண்டும் எனவும் இராணுவத்தரப்பு 06

# பந்துல குணவர்த்தன விசாரணைக்கு அழைப்பு

தேசிய லொத்தர் சபை விவகாரம் தொடர்பில் கூட்டு எதிரணி நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்த்தன குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் விசாரணைக்கு அழைக்கப்பட்டுள்ளார். இது பற்றிக் குறிப்பிட்டுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்த்தன எதிர்வரும் 25ஆம் திகதி குற்றப் புலனாய்வுப் பிரிவினர் தன்னை விசாரணைக்காக சமுகமளிக்குமாறு அழைப்பு வந்துள்ளதாகத் தெரிவித்ததார், 06

# நாமல் ராஜபக்ச விரைவில் கைது ?



பொலிஸ் நிதிக்குற்ற விசாரணைப் பிரிவின் உப பொலிஸ் அதிகாரி ஒருவருக்கு மிரட்டல் விடுத்த சம்பவம் தொடர்பில், நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்சவைக் கைது செய்ய, பொலிஸாருக்கு அதிகாரம் உள்ளதாக, கொழும்பு மேலதிக நீதவான் நீதிமன்ற நீதவான், தெரிவித்துள்ளார்.

இச்சம்பவம் தொடர்பில், நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்சவை நீதிமன்றத்தில் ஆஜராகுமாறும், 06

# 20 க்கு ஆதரவு

அனைத்துக் கட்சிகளும் ஆதரவு வழங்கினால் 20ஆவது திருத்தத்துக்கு ஆதரவு வழங்க முடியும் என ஜே.வி.பி தெரிவித்துள்ளது. ஒரே தினத்தில் தேர்தலை நடத்துவதால் செலவு குறைக்கப்படும். அதன் மூலம் மக்களுக்கே நன்மை கிடைக்கும் என்று தாங்கள் கருதுவ 06

## விழிப்புணர்வுப் பேரணி




சிறுவர் துஷ்பிரயோகத்துக்கெதிராக கிளிநொச்சியில் இன்று இருவேறு விழிப்புணர்வுப் பேரணிகள் இடம்பெற்றுள்ளன.

ஆஸ்திரேலியாவுக்கு செல்வதற்கான வழிகாட்டல் கருத்தரங்கு

ஆரம்பம் 23.08.2017 புதன்கிழமை

- ஆஸ்திரேலியா சென்று தொழில்புரிய ஆசையா?
- சட்டபூர்வமாகச் செல்லும் வழி தெரியவில்லையா?
- கவலையை விடுங்கள்
- உங்களுக்கு வழிகாட்டுகிறது இந்தக் கருத்தரங்கு
- 30 பேருக்கு மட்டுமே சந்தர்ப்பம்

நேரம்: 7.00 p.m.- 8.30 p.m

அனுமதி இலவசம்

Website : www.sanjicaldera.com

MIA MEMBER OF MIGRATION INSTITUTE — OF AUSTRALIA —
Migration Agents Reg No. 0635492

ஜெட்வின் ஹோட்டல், மகாத்மா காந்தி வீதி, யாழ்ப்பாணம்.

மின்னஞ்சல் keith@sanjicaldera.com

முற்பதிவுகளுக்கு முந்துங்கள் பதிவு - 6.15 p.m - 6.45 p.m

தொடர்புகளுக்கு: 076 601 3381, 077 889 7853

## வவுனியாவில் இளைஞன் தூக்கிட்டு தற்கொலை

வெளிநாட்டிலிருந்து விடுமுறையில் வந்த இளைஞரொருவர் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

குறித்த இளைஞனின் சடலம் இன்று காலை வவுனியா சமயபுரம் அம்மன் கோவிலுக்கு அருகிலுள்ள அவரது வீட்டின் மரத்தில் தூக்கில் தொங்கிய நிலையில் மீட்கப்பட்டுள்ளது. வவுனியாவைச் சேர்ந்தவர் மாரிமுத்து பிரசாந்தன் (வயது 26). கட்டாரில் பணியாற்றிவரும் இவர் கடந்த இரு மாதத்துக்கு முன்னர் விடுமுறையில் ஊர் வந்துள்ளார். வெளியில் சென்றுவிட்டு வழமைபோலவே நேற்று இரவு வீட்டுக்கு வந்துள்ளார்.

எனினும் இன்று அதிகாலை இளைஞன் மரத்தில் தூக்கில் தொங்கிய நிலையில் காணப்பட்டுள்ளார். சம்பவம் தொடர்பில் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டுள்ளது. இது தொடர்பான மேலதிக விசாரணைகளை வவுனியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (உ)

## புத்தர் சிலைகளுக்கு அமெரிக்கா எதிர்ப்பு



வடக்கு, கிழக்கில் புத்தர் சிலை நிர்மாணிப்பது தொடர்பில் அமெரிக்க அரச திணைக்களம் எதிர்ப்பு வெளியிட்டுள்ளது.

அமெரிக்க அரச திணைக்களத்தினால் வெளியிடப்பட்டுள்ள மத ரீதியான சுதந்திரம் என்ற அறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது. பௌத்த தேரர்கள், கிறிஸ்தவர்கள் மற்றும் முஸ்லிம்களுக்கு எதிராகத் தாக்குதல் மேற்கொள்வதாகவும், அவர்களுக்கு எதிராக அரசாங்கம் நடவடிக்கை மேற்கொள்ளவில்லை எனவும் இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பௌத்த குழுக்கள் மற்றும் இராணுவத்தினரால் வடக்கு, கிழக்கில் புத்தர் சிலைகள் நிறுவப்பட்டு ஏகாதிபத்தியக் கொள்கை முன்னெடுக்கப்பட்டுள்ளதாக அரச சார்பற்ற அமைப்புகள் மற்றும் அரசியல்வாதிகளினால் தகவல் வெளியிடப்பட்டுள்ளதாக அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

வடக்கு மற்றும் கிழக்குப் பிரதேசங்கள் தமிழர்கள் மற்றும் முஸ்லிம்களுக்கு சொந்தம் எனவும், சிறிய அளவிலான பௌத்தர்களுக்காக புத்தர் சிலைகள் நிறுவப்பட்டுள்ளதாக அமெரிக்க அரச திணைக்களம் குறிப்பிட்டுள்ளது. (உ)

## தேர்தலைக் குறிவைத்தே வாகன விலைக் குறைப்பு



தேர்தலை இலக்கு வைத்து வாகன விலைகள் குறைக்கப்படுவதாகக் கூட்டு எதிர்க்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் டளஸ் அழப்பெரும தெரிவித்துள்ளார்.

வாகனங்களின் விலைகள் குறைக்கப்படுவதாக அரசாங்கம் விடுத்துள்ள அறிவிப்பானது தேர்தலுக்கான அறிகுறியாகவே கருதப்பட வேண்டுமென தெரிவித்துள்ளார்.

வாகனங்களின் வரியைக் குறைப்பதனால் தாழ் மட்ட மக்களுக்கு எவ்வித நலன்களும் கிடைக்கப் போவதில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை, இணைய வரிகள் நீக்கப்படுவதனால் சில நலன்கள் கிடைக்கும் என அவர் குறிப்பிட்டுள்ளார். அப்பாவி மக்களின் சமுர்த்தி கொடுப்பனவையும் இந்த அரசாங்கம் வரையறை செய்வதாகவும், கீழ் மட்ட மக்களுக்கு அரசாங்கம் எவ்வித நலன்களையும் வழங்கவில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார். (உ)

## மத்தி—கலைமதி இன்று மோதல்

இடைக்காடு ஐக்கிய விளையாட்டுக் கழகம் நடத்திவரும் கரப்பந்தாட்டத் தொடரின் இறுதியாட்டம் இன்று இரவு 7 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்த இறுதியாட்டத்தில் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து புத்தூர் கலைமதி விளையாட்டுக் கழகம் மோதவுள்ளது.

கலைமதி விளையாட்டுக் கழகம் ஆவரங்கால் இந்து இளைஞரையும், மத்திய விளையாட்டுக் கழகம் புத்தூர் வளர்மதியையும் அரையிறுதிகளில் வீழ்த்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## 8 பொலிஸாருக்கு பதவி உயர்வு

சிரேஷ்ட பொலிஸ் உத்தியோகத்தர்கள் 8 பேருக்குத் தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் அனுமதிக்கமைய பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது. அந்த வகையில் இவர்களுக்கு பொலிஸ்மா அதிபரால், பிரதிப் பொலிஸ்மா அதிபராக பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது.

அநுராதபுரம், கண்டி, மன்னார், காலி, நீர்கொழும்பு மற்றும் மருத்துவ பிரிவுக்குப் பொறுப்பாக இருந்த சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகளும், பிரதிப் பொலிஸ்மா அதிபர்களாகப் பதவி உயர்வு பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ)

## விசாரணை அதிகாரி வீட்டுக்கு 'விஸ்கி' கொடுத்த நாமல்



நிதி மோசடி விசாரணை பிரிவு அதிகாரி லலித் ஷாந்தவின் மகளின் திருமணத்துக்கு 50 வற் 69 விஸ்கி போத்தல்களை வழங்கினோம் என நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

தனக்கு எதிராக போலி குற்றச்சாட்டு சுமத்தி விளக்கமறியலுக்கு அனுப்ப முயற்சிக்கும் நிதி மோசடி விசாரணை பிரிவு அதிகாரியின் மகளுக்கே இவ்வாறு வழங்கினோம் என தெரிவித்துள்ளார். இவ்வாறு 50 போத்தல் தானும் தனது சகோதரர் யோஷிதவும் பரிசாக வழங்கினோம் எனவும் அதனை ஊடகத்தின் முன்னால் வெளிப்படுத்துவதற்கு தயார் எனவும் நாமல் ராஜபக்ச குறிப்பிட்டுள்ளார். தெற்கு களுத்துறையைச் சேர்ந்த பொலிஸ் உப பரிசோதகர் லலித் ஷாந்தவின் வீட்டுக்கு முச்சக்கர வண்டியில் கொண்டு சென்றதாக நாமல் கூறியுள்ளார். நிதி மோசடி விசாரணை பிரிவு அதிகாரிகள் அந்த திருமண வீட்டுக்குச் சென்று வற் 69 விஸ்கியை அருந்திய காணொளி ஒன்றும் தங்களிடம் உள்ளதாகவும், தான் மற்றும் தனது சகோதரர் இதனை ஊடகத்தில் வெளிப்படுத்த தயார் என நாமல் தெரிவித்துள்ளார்.

தான் மீண்டும் விளக்கமறியலுக்கு செல்ல நேரிட்டால், நிதி மோசடி விசாரணைப் பிரிவின் அதிகாரிகளினதும் உண்மை தகவல்களை ஊடகத்திடம் வெளிப்படுத்துவதற்கு ஒரு போதும் தயங்கப்போவதில்லை என மேலும் குறிப்பிட்டுள்ளார். (உ)

## பாலியல் சேஷ்டை மூவர் கைது

இசை கற்பதற்காக, தனியார் வகுப்புக்குச் சென்றுகொண்டிருந்த 16 வயது சிறுமியிடம், பாலியல் சேஷ்டையில் ஈடுபட்ட மூன்று சந்தேகநபர்களை, தடங்கொட பொலிஸார் நேற்று கைதுசெய்துள்ளனர்.

தடங்கொடயில் இருந்து மதுகமைக்குக் கொண்டுச் சென்று விடுவதாக கூறி, முச்சக்கர வண்டியில் சிறுமியை ஏற்றிக்கொண்ட மூவரும், சிறுமியிடம் பாலியல் சேஷ்டையில் ஈடுபட்டுள்ளனர்.

எனினும், முச்சக்கரவண்டியின் இலக்கத்தைக் குறித்து வைத்துக்கொண்ட சிறுமி, இது தொடர்பாக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்ததையடுத்து, மூவரும் கைது செய்யப்பட்டுள்ளனர். (உ)

## அமிருக்கு சிலை வைக்க அனுமதி மறுப்பு



வவுனியாவில் தமிழரசுக் கட்சியின் முன்னாள் பொதுச் செயலாளரும், எதிர்க் கட்சியின் முன்னாள் தலைவருமான அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கத்துக்கு சிலையை நிறுவுவதற்கான இடத்துக்கு குடியிருப்பு கிராம அபிவிருத்திச் சங்கம் அனுமதியளிப்பதற்கு தாமதப் படுத்தி வருகின்றதாக தெரிவிக்கப்படுகின்றது.

அன்னாரது சிலையினை நிறுவுவதற்கு அனைத்து ஏற்பாடுகளையும் மேற்கொண்டுள்ள நிலையில் அதனை நிறுவுவதற்கு இடத்தைத் தெரிவு செய்த போதும் அதற்கான அனுமதி தாமதமாகி வருவதாக கூறப்படுகின்றது.

இதன் காரணமாக கடந்த மூன்று வருடங்களாக பாதுகாப்பற்ற பகுதியில் சிலையினை வைத்துக் கொண்டு அவதிப்பட்டு வருவதாக சமூகசேவையாளரும், தமிழரசுக் கட்சியின் கடந்த 35 வருடங்களாக சேவையாற்றும் கணேசுபுரம் பகுதியிலுள்ள இரா. சுப்பிரமணியம் தெரிவித்துள்ளார்.

சிலையை நிறுவுவதற்கு தற்போது ஒரு பொருத்தமான இடமான யாழ். வீதி வைத்தியசாலை சுற்றுவட்ட வீதி சந்தி அருகில் நிறுவுவதற்கு பிரதேச செயலகம், நகரசபை ஆகியவற்றிடம் அனுமதியினை பெற்றுக்கொள்வதற்கு சிலையை நிறுவுவதற்கு தெரிவு செய்யப்பட்டுள்ள இடம் குடியிருப்பு கிராம அபிவிருத்திச் சங்கத்துக்குள் வருவதால் அவர்களிடம் அனுமதிக்கடிதத்தைக் கொடுத்து விட்டு காத்திருக்கின்றேன். என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (உ)

## திருவள்ளுவர் பொன்விழா






யாழ். சரவணை திருவள்ளுவர் சனசமூக நிலையத்தின் 50 ஆவது ஆண்டு பொன் விழா நேற்று நிலையத் தலைவர் க.இ.வினாயகன் தலைமையில் நடைபெற்றது.

இந் நிகழ்வில் பொன் விழா மலரினை நிலையத் தலைவர் வெளியிட்டு வைக்க, பிரதம விருந்தினரான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சி. சிறீதரன், சிறப்பு விருந்தினரான யாழ். மாவட்ட வட மாகாணசபை உறுப்பினர் என். விந்தன் கனகரட்ணம் ஆகியோர் பெற்றுக் கொண்டனர்.

தொடர்ந்து தீவக கோட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான இல்ல மெய்வல்லுநர் போட்டிகள், உதைபந்தாட்டம், தாம், கரம்போட், தாச்சி, மரதன் ஓட்டம், செஸ் ஆகிய போட்டிகளும், பரிசில்கள் வழங்கும் நிகழ்வும், கௌரவிப்பு நிகழ்வுகளும் நடைபெற்றன. (உ)

# சர்ச்சையில் டிரம்ப்



அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப் தனது ருவிட்டர் பக்கத்தில் சர்சைக்குரிய கருத்தொன்றைப் பதிவிட்டதால் கடும் விமர்சனங்கள் எழுந்துள்ளன.
அமெரிக்காவில் 19ஆம் நூற்றாண்டில் வெள்ளை இனவாதத்தை ஆதரித்தவர்களாகக் கருதப்படும் பலரது சிலையை இனவாத எதிர்ப்புக் குழுவினர் அகற்றி வருகின்றனர்.எனினும் தலைவர்களின் சிலையை அகற்றுவதற்கு அந்நாட்டு ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் எதிர்ப்புத் தெரிவித்திருக்கிறார்.டிரம்ப் தனது ருவிட்டர் பக்கத்தில், வரலாற்றை ஒருபோதும் மாற்ற முடியாது. அதிலிருந்து பாடத்தைக் கற்றுக் கொள்ளலாம் என குறிப்பிட்டிருக்கிறார்.
ஏற்கனவே வெர்ஜீனியாவில் வெள்ளை இனவாதக் குழுவினர் நடத்திய பேரணியை ஆதரிக்கும் வகையில் பேசி, சர்ச்சையில் சிக்கியிருந்தார் டிரம்ப். தற்போது வெள்ளையினத்துக்கு ஆதரவான இனவாதக் கருத்துக்களை வெளியிட்டதாக அவர் மீது கடும் விமர்சனங்கள் எழுந்துள்ளன. (இ)

# ஸ்பெயின் தாக்குதல்: 3 பேர் விரைவில் கைது

ஸ்பெயினின், பார்சிலோனா பகுதியில் தாக்குதல் நடத்தியர்களில் மூவரை அடையாளம் கண்டுள்ளதாக ஸ்பெயின் பொலிஸ் கூறியுள்ளது.
மொத்தம் 12 பேரை இந்தச் சம்பவம் தொடர்பாக பொலிஸார் தேடி வந்ததாகவும், இதில் மூன்று பேரை அடையாளம் கண்டுள்ளதாகவும், ஒருவரைத் தேடி வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.
தாக்குதலோடு தொடர்புடைய 12 பேரில் ஐவரைப் பொலிஸார் சுட்டுக்கொன்றுவிட்டதாகவும், நால்வர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகின்றது. எஞ்சிய மூவரும் விரைவில் கைதாவர் என்று பொலிஸார் நம்பிக்கை வெளியிட்டுள்ளனர். இதேவேளை, தாக்குதல் நடத்திய வாகனத்தை ஓட்டியவரை இதுவரை அடையாளம் காணமுடியாதிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)



# ஒன்றிணைவு புஸ்வாணம்!



கட்சியிலும், ஆட்சியிலும் பதவிகளைப் பிரிப்பதில் இழுபறி ஏற்பட்டதால் நேற்றிரவு நடக்கவிருந்த அதிமுக அணிகள் இணைப்பு புஸ்வாணமானது.
ஜெயலலிதாவின் மறைவுக்குப் பிறகு, அ.தி.மு.க.வில் சலசலப்பு ஏற்பட்டு கட்சி இரண்டாக உடைந்தது.எனினும் பன்னீர்செல்வம் தரப்பின் முக்கிய கோரிக்கைகள் நிறைவேற்றப்படும் என முதலமைச்சர் எடப்பாடி அறிவித்ததால் மீண்டும் இணையும் சாத்தியம் அதிகரித்தது. நேற்றிரவு ஜெயலலிதா சமாதிக்கு முன்னால், முதலமைச்சர் எடப்பாடி பழனிச்சாமியும், முன்னாள் முதலமைச்சர் ஓ. பன்னீர்செல்வமும் இணைந்து கொள்ளத் திட்டமிடப்பட்டிருந்தது.
ஆனால் கட்சியிலும், ஆட்சியிலும் பதவிப் பங்கீட்டில் குழப்ப நிலை நீடித்ததால், இணைப்பு முயற்சி நேற்றிரவு நடைபெறாமல் போனது.
இதனால் தொண்டர்கள் பலத்த ஏமாற்றமடைந்தனர்.
இரு அணிகளிடையே இணைப்புத் தொடர்பில் மீண்டும் பேச்சுவார்த்தை நடைபெறும் என்று தெரிகிறது. (இ)

# ஆறுதல்!

பயங்கரவாதத்துக்கு எதிராக ஸ்பெயினுடன் பிரிட்டன் எப்போதும் துணை நிற்கும் என்று பிரிட்டன் பிரதமர் தெரேசா மே ஸ்பெயின் மக்களுக்கு ஆறுதல் கூறியுள்ளார்.
ஸ்பெயின் நாட்டில் உள்ள பார்சிலோனாவில் நடத்தப்பட்ட தாக்குதலில் 13 பேர் கொல்லப்பட்டதுடன் நூற்றுக்கும் அதிகமானோர் காயமடைந்துள்ளனர்.
மக்கள் கூட்டத்தில் வாகனம் மூலம் மோதி இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது.சம்பவத்துக்குப் பின்னர் தாக்குதலில் ஈடுபட்ட ஐந்து பேரைப் பொலிஸார் சுட்டுக் கொன்றனர்.
இதைத் தொடர்ந்து பார்சிலோனா நகரம் பொலிஸாரின் பாதுகாப்பு வளையத்துக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது.
இந்நிலையில் தாக்குதல் சம்பவத்துக்கு தனது ஆழ்ந்த இரங்கலைப் பிரிட்டன் பிரதமர் தெரேசா மே தெரிவித்துள்ளார்.
பிரிட்டன் எதிர்க்கட்சித் தலைவர் ஜெரமி கோர்பனும், இந்தத் சம்பவத்துக்கு தனது இரங்கலை தெரிவித்துள்ளார். (இ)



# தாய்லாந்தில் சிறை விடுதி



தாய்லாந்தில் உணவு விடுதியொன்று சிறை போன்று வடிவமைக்கப்பட்டுள்ளதால், சுற்றுலாப் பயணிகள் அங்கு தங்கிச் செல்ல ஆர்வம் காட்டி வருகின்றனர்.
இங்குள்ள அறைகள் அனைத்தும் சிறைச்சாலைகளில் உள்ளவற்றைப் போன்றே வடிவமைக்கப்பட்டிருக்கின்றன. அங்கு தங்குவதற்காக வருவோருக்கு கைதிகளுக்கான சீருடை போன்ற ஆடைகள் வழங்கப்படுகின்றன.
விளக்குகள், கதவுகள் போன்றவையும் சிறையைப் போன்றே வடிவமைக்கப்பட்டிருக்கின்றன.
1994ஆம் ஆண்டு வெளியான "தி ஷாஷான்க் ரெடம்ப்சன்" திரைப்படத்தைப் பார்த்த பின்பே இப்படியொரு விடுதியை வடிவமைக்கும் எண்ணம் வந்ததாக இதன் உரிமையாளர்கள் தெரிவித்துள்ளனர்.
ஒரேயொரு முறை வரும் வாடிக்கையாளர்களைக் குறிவைத்தே இந்தத் திட்டத்தைத் தொடங்கியதாகவும், ஆனால் ஒரு முறை வந்தவர்கள் மீண்டும் திரும்பி வருவதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர். (இ)

# வாழ விடுங்கள்: சிங்கங்களை!!

தென்னாபிரிக்காவைச் சேர்ந்த கெவின் ரிச்சர்ட்சன், சுற்றுச்சூழல் ஆர்வலர். விலங்குகள் நிபுணர். தாயால் கைவிடப்பட்ட 2 சிங்கக் குட்டிகளை எடுத்து, வளர்த்து வருகிறார். மெக், ஆமி என்ற இந்த இரண்டு சிங்கங்களும் பெரிதாக வளர்ந்து விட்டன. தற்போது கெவின் ஒரு வீடியோவை வெளியிட்டிருக்கிறார். தண்ணீருக்குள் நிற்கும் கெவின், சிங்கத்தைப் பார்த்து "என்னைப் பிடிக்க முடியுமா ?" என்று கேட்கிறார். சிங்கம் அவரையே உற்றுப் பார்க்கிறது. பிறகு ஓர் இரையைப் பிடிப்பதுபோல் இரண்டு கால்களையும் தூக்கிக்கொண்டு கெவின் மீது பாய்கிறது. பார்ப்பவர்கள் பயத்தில் உறைந்து விடுகிறார்கள். ஆனால், சிங்கம் கெவின் தோள்களைப் பற்றி, அணைத்துக் கொள்கிறது. "இந்தச் சிங்கங்களைக் காட்டுக்குள் மற்ற விலங்குகளுடன் விட்டுவிட்டால், இப்போதிருப்பதை விட சிறந்த வாழ்க்கை கிடைக்கும். ஆனால் சிங்கங்களைப் பலரும் தீவிரமாக வேட்டையாடுவதால் என்னால் இவற்றைக் காடுகளில் விட மனமில்லை. இவ்வளவு அன்பான சிங்கங்களை வாழ அனுமதிப்போம்" என்று வேண்டுகோள் விடுக்கிறார் கெவின் ரிச்சர்ட்சன்.(இ)



# 3 தாக்குதல்களிலும் தப்பிய பெண்!



ஜூலியா மொனாக்கோ ஆபத்தின்றி உயிர் தப்பியுள்ளார்.
பார்சிலோனா ரம்பிலாஸ் பகுதியில் உள்ள கடை ஒன்றுக்கு தனது நண்பருடன் இந்த பெண் சென்றபோது வேகமாக வந்த வாகனம் அருகில் இருந்தவர்களை மோதிக் கொன்றது. (இ)

இந்த வருடம் இடம்பெற்ற மூன்று பயங்கரவாதத் தாக்குதல்களின் போது, சம்பவ இடங்களில் இருந்து உயிர் தப்பிய ஆஸ்திரேலிய பெண் ஒருவர் தொடர்பில் தகவல் வெளியாகியுள்ளது.
மூன்று நாடுகளின் மூன்று இடங்களில் இடம்பெற்ற பயங்கரவாதத் தாக்குதல்களின் போது குறித்த பெண் சம்பவ இடத்தில் இருந்துள்ளார்.
ஆஸ்திரேலியா மெல்போர்ன் நகரத்தைச் சேர்ந்த 26 வயதுடைய ஜூலியா மொனாக்கோ என்ற பெண்ணே இவ்வாறு உயிர் தப்பியுள்ளார்.
பார்சிலோனாவில் நேற்று இடம்பெற்ற பயங்கரவாதத் தாக்குதலின் போதும்




# ஜப்பான் ஆதரவு

இந்தியா, சீனா இடையிலான டோக்லாம் எல்லைப் பிரச்சினையில் இந்தியாவுக்கு ஜப்பான் ஆதரவுக்கரம் நீட்டியுள்ளது.
சிக்கிம், திபெத், பூட்டான் சந்திப்புப் பகுதியான டோக்லாமில் புதிதாக வீதி ஒன்றை அமைக்க சீன இராணுவம் முயற்சி மேற்கொண்டது.
இந்தப் பகுதி இந்தியாவின் 'கோழிக் கழுத்து' என்றழைக்கப்படும் வடகிழக்கு மாநிலங்களை இணைக்கும் பகுதியில் இருந்து 20 கி.மீ. தொலைவில் உள்ளது.
இங்கு சீனா, வீதி அமைத்தால் கோழிக் கழுத்துப் பகுதியை அணுகுவது மிக எளிதாகிவிடும்.இதனால் சீனாவின் வீதி அமைப்புப் பணியை இந்திய இராணுவம் தடுத்து நிறுத்தியது.
இதன்காரணமாக அங்கு 2 மாதங்களுக்கும் மேலாக பதற்றம் நீடிக்கிறது.
இந்தப் பின்னணியில் இந்தியாவுக்கான ஜப்பான் தூதர் கென்ஜி ஹிராமட்ஸூ டெல்லியில் கூறும்போது, "டோக்லாம் பிரச்சினையை ஜப்பான் மிகவும் உன்னிப்பாகக் கண்காணித்து வருகிறது. தற்போதைய பதற்றத்தால் பிராந்திய அமைதிக்கு பாதிப்பு ஏற்படும். பூட்டானுடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில் இந்தியா செயற்படுவதை நாங்கள் உணர்ந்துள்ளோம்.எல்லைப் பிரச்சினையில் சீனா தன்னிச்சையாக முடிவெடுப்பது தவறு. படை பலத்தால் எல்லையை மாற்ற முயற்சிக்கக்கூடாது" என்று இந்தியாவுக்குத் தனது ஆதரவை வெளிப்படுத்தியுள்ளார்.
(இ)

# ஓட்டோவில் வந்த அதிரடி ராணி

'பிக் பாஸ்' வீட்டுக்குள் தற்போது புது வரவுகள் வரத் தொடங்கியுள்ளன. இதில் நேற்றுப் புதுவரவாக நடிகை காஜல் பசுபதி 'பிக் பாஸ்' வீட்டுக்குள் நுழைந்தார்.

ஓட்டோவில் அதிரடியாக வீட்டுக்குள் நுழைந்த அவர், பங்கேற்பாளர்கள் அனைவரிடமும் சரமாரியாகக் கேள்விகளை எழுப்பினார்.

காயத்திரியைப் பார்த்து, "நானும் உங்களை மாதிரித்தான், மனசுல பட்டதை முகத்துக்கு நேரா பேசிடு



வேன்" என்று கூறினார்.

பிந்துவைப் பார்த்து, "எல்லாம் தெரிஞ்சும் இத்தனை நாள் சும்மாவே இருக்கிறாயே, ஏதாவது செய்" என்று நக்கல் அடித்தார்.

குறிப்பாக ஆரவிடம், "ஓவியா விஷயத்தில் நீங்கள் எடுத்த முடிவில் எனக்கு உடன்பாடு இல்லை. உலகமே விரும்பும் பெண்ணை உங்களுக்கு ஏன் பிடிக்காமல் போய்விட்டது?" எனப் பல கேள்விகளைச் சரமாரியாக எழுப்பினார். (ஒ)




# சிக்கல்

2019ஆம் ஆண்டு நடைபெறவிருக்கும் ஒருநாள் உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடருக்கு நேரடியாகத் தகுதி பெறுவதில் இலங்கை அணிக்கு கடும் சிக்கல் ஏற்பட்டுள்ளது.

அதேவேளை, நேரடியாகத் தகுதிபெறும் 8 அணிகளுள் கடைசி அணிக்கான போட்டியில் மேற்கிந்தியத் தீவுகள் - இலங்கை அணிகளுக்கிடையே கடும் போட்டி நிலவுகிறது.

2019ஆம் ஆண்டில் ஒருநாள் உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடர் இங்கிலாந்து மற்றும் வேல்ஸில் நடைபெறவுள்ளது. மொத்தமாக 10 அணிகள் பங்கேற்கும் இத்தொடரில், போட்டியை நடத்தும் நாடு என்ற அடிப்படையில், இங்கிலாந்து அணி ஏற்கனவே தகுதிபெற்றுவிட்டது.

எஞ்சியுள்ள 9 இடங்களில், அடுத்த மாதம் ஒருநாள் தரவரிசையில், இங்கிலாந்தைத் (தற்போது 4ஆவது இடம்) தவிர்த்து முதல் 7 இடங்களில் உள்ள அணிகள் நேரடியாகத் தகுதி பெறும். மீதமுள்ள 2 இடங்களுக்கு, 2018ஆம் ஆண்டு மார்ச் 1 முதல் ஏப்ரல் 4 வரை பங்களாதேஷில் நடைபெறவுள்ள உலகக் கிண்ணத்துக்கான தகுதிச்சுற்றுப் போட்டிகளில் வெற்றி பெறும் 2 அணிகள் தகுதி பெறும்.

இதன்படி தற்போது, இலங்கை அணி ஒருநாள் தரவரிசையில் 88 புள்ளிகளுடன் 8ஆவது இடத்தில் உள்ளது. இதேபோல மேற்கிந்தியத்தீவுகள் அணி 78 புள்ளிகளுடன் 9ஆவது இடத்தில் உள்ளது.

இதனால், இந்திய அணிக்கு எதிரான 5 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் இலங்கை அணி கட்டாயமாக 2 போட்டிகளில் வெற்றிபெற வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. அப்படிச் செய்யத் தவறும் பட்சத்தில் மேற்கிந்தியத் தீவுகள் அணி, இந்த இடைப்பட்ட நாட்களில் அயர்லாந்து (1 போட்டி ) இங்கிலாந்து (5 போட்டிகள்) அணிக்கு எதிராக மொத்தமாக 6 ஒருநாள் போட்டிகளில் பங்கேற்கவுள்ளது.

இந்த அனைத்துப் போட்டிகளிலும் வெல்லும் பட்சத்தில் மேற்கிந்தியத் தீவுகள் அணி உலகக் கிண்ணத்துக்கு நேரடியாகத் தகுதி பெறும். இலங்கை தகுதிச் சுற்று மூலம் வரும் நிலை ஏற்படும். மாறாக மேற்கிந்தியத் தீவுகள் அணி ஒரு போட்டியில் தோற்றால் கூட இலங்கை அணி, இந்திய அணிக்கு எதிராக 5 ஒருநாள் போட்டிகளில் தோற்றாலும் உலகக் கிண்ணத் தொடருக்கு நேரடியாகத் தகுதி பெறும். (ஐ)

# ஜீ.வி.பி.யின் ருவிட்டால் ரசிகர்கள் 'மெர்சல்'

அட்லீ இயக்கத்தில் விஜய் நடிக்கும் 'மெர்சல்' பட இசை வெளியீட்டு விழா நாளை மிகவும் பிரமாண்டமாக நடைபெறவிருக்கிறது.

அப்படத்தில் இடம்பெறும் இரண்டு பாடல்கள் ஏற்கெனவே வெளியாகி ரசிகர்களின் அமோக வரவேற்பைப் பெற்றிருக்கிறது. இந்த நிலையில் இப்படத்தில் வரும் 'மெர்சல்' அரசன் என்ற பாடலைத் தான் பாடியிருப்பதாகவும், பாடல் காட்சிகளை திரையில் பார்க்க ஆர்வமாக இருப்பதாகவும் ஜி. வி. பிரகாஷ் ருவிட் செய்துள்ளார்.

சிறு வயதில் ஏ.ஆர். ரகுமான் இசையில் சில பாடல்களைப் பாடிய ஜி.வி. பிரகாஷ், நீண்ட இடைவேளைக்குப் பின்னர் 'மெர்சல் படத்தில் மீண்டும் பாடியுள்ளார். (ஒ)






# ஓட்ட மழை

இங்கிலாந்து - மேற்கிந்தியத் தீவுகளுக்கிடையிலான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி பார்மிங்காமில் நேற்றுமுன்தினம் தொடங்கியது.

பகல்-இரவுப் போட்டியான இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி, தொடக்க நாளில் 3 விக்கெட்டுகள் இழப்புக்கு 348 ஓட்டங்களைச் சேர்த்தது.

அணித் தலைவர் ஜோ ரூட் 136 ஓட்டங்களைச் சேர்த்தார். அலைஸ்டயர் குக் 153 ஓட்டங்களுடனும், டேவிட் மலான் 28 ஓட்டங்களுடனும் களத்தில் இருந்தனர்.

இந்த நிலையில் 2ஆவது நாளான நேற்றும் இங்கிலாந்துத் துடுப்பாட்ட வீரர்களின் ஆதிக்கம் நீடித்தது. அபாரமாக ஆடிய அலஸ்டயர் குக் தனது 4ஆவது இரட்டைச் சதத்தைப் பூர்த்தி செய்தார். மலான் 65 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

இறுதியில் இங்கிலாந்து அணி 514 ஓட்டங்களுக்கு 8 விக்கெட்டுகளை இழந்த நிலையில் ஆட்டத்தை இடைநிறுத்தியது.

பின்னர் தனது இன்னிங்ஸைத் தொடங்கிய மேற்கிந்தியத் தீவுகள் அணி, நேற்றைய ஆட்ட நேர முடிவின்போது, பிராத் வைட்டை இழந்த நிலையில் 44 ஓட்டங்களைச் சேர்த்திருந்தது. இன்று ஆட்டத்தின் மூன்றாம் நாளாகும். (ஐ)



# இந்திய ஜோடிகள் அசத்தல்

சின்சினாட்டி ஓபன் டென்னிஸ் தொடரில் இரட்டையர் ஆட்டங்களில் இந்திய நட்சத்திரங்கள் முன்னேற்றமடைந்துள்ளன.

பெண்கள் இரட்டையர் பிரிவில் காலிறுதி ஆட்டம் ஒன்றில் சானியா மிர்ஷா (இந்தியா)-பெங் ஷூய் (சீனா) ஜோடி 6-3, 6-7, 10-3 என்ற சுற்றுக் கணக்கில் ருமேனியாவின் கேம்லியா பெகு-ராலுசா ஒலாரு இணையைத் தோற்கடித்து அரையிறுதிக்குள் நுழைந்தது.

ஆண்கள் இரட்டையர் பிரிவின் 2ஆவது சுற்று ஆட்டம் ஒன்றில் ரோகன் போபண்ணா (இந்தியா)- இவான் டோடிக் (குரோஷியா) கூட்டணி 5-7, 7-5, 10-8 என்ற சுற்றுக் கணக்கில் ஜூவான் செபஸ்டியன்காபல்(கொலம்பியா) - பாபியோ போக்னி (இத்தாலி) ஜோடியை வீழ்த்தி காலிறுதிக்குத் தகுதி பெற்றது. (ஐ)

# காலிறுதியில் முகுருஜா

சின்சினாட்டி ஓபன் டென்னிஸ் தொடரில் காலிறுதிச் சுற்றுக்கு ஸ்பெய்னின் முகுருஜா முன்னேறியுள்ளார்.

சின்சினாட்டி ஓபன் டென்னிஸ் போட்டி அமெரிக்காவில் நடந்து வருகிறது.

இதில் ஆண்கள் ஒற்றையர் பிரிவில் 3ஆவது சுற்று ஆட்டம் ஒன்றில் உலகத் தர வரிசையில் 8ஆவது இடத்தில் இருக்கும் டொமினிக் திம் (ஆஸ்திரியா) 7-6, 7-6 என்ற சுற்றுக் கணக்கில் 36ஆம் நிலை வீரரான அட்ரியன் மன்னாரினோவை (பிரான்ஸ்) தோற்கடித்து காலிறுதிக்கு முன்னேறினார்.

இதேபோல் டிமிட்ரோவ் (பல்கேரியா), டேவிட் பெரர் (ஸ்பெயின்), ஜோன் இஸ்னர் (அமெரிக்கா), டொனால்ட்சன் (அமெரிக்கா), யுஷி சுஜிதா (ஜப்பான்) ஆகியோரும் தங்களது ஆட்டங்களில் வெற்றி கண்டு காலிறுதியை எட்டினர்.

பெண்கள் ஒற்றையர் பிரிவில் 3ஆவது சுற்று ஆட்டம் ஒன்றில் விம்பிள்டன் சம்பியனான கார்பின் முகுருஜா (ஸ்பெய்ன்) 6-4, 3-6, 7-6 என்ற சுற்றுக் கணக்கில் மேடிசன் கீஸ்ஸை (அமெரிக்கா) வீழ்த்தி காலிறுதிக்கு முன்னேறினார்.

இன்னொரு ஆட்டத்தில்இங்கிலாந்து வீராங்கனை ஜோஹன்னா கோன்டா 6-3, 6-4 என்ற புள்ளிக் கணக்கில் ஸ்லோவோக்கியாவின் சிபுல்கோவாவைச் சாய்த்து காலிறுதிக்குள் அடியெடுத்து வைத்தார். சிமோனா ஹலெப் (ருமேனியா), வொஸ்னியாக்கி (டென்மார்க்), குஸ்னெட்சோவா (ரஷ்யா) ஆகியோரும் காலிறுதியை உறுதி செய்தனர். (ஐ)

# எம்.ஜி.ஆர். இடத்தில் பிரபுதேவா




எஸ்.கல்யாண் இயக்கத்தில் உருவாகி வரும் 'குலேபகாவலி' படத்தில் பிரபுதேவா - ஹன்சிகா ஆடும் பாடல் ஒன்றுக்கு 2 கோடி ரூபா செலவில் செட் அமைக்கப்படுகிறது.

இந்த படம் 1955ஆம் ஆண்டு டி.ஆர். ரமணா இயக்கத்தில் எம்.ஜி.ஆர் நடிப்பில் வெளியான 'குலேபகாவலி' படத்தின் தொடர்ச்சியாக இருக்கும் என்று கூறப்படுகிறது.

மேலும் இதில் ஒரு 'பிளாஸ்பக்' காட்சி இருப்பதாகவும், அந்தக் காட்சியில்தான் இரு படங்களுக்குமான இணைப்பு இருப்பதாகவும் கூறப்படுகிறது. (ஒ)

## இன்றைய கருத்தோவியம்



நன்றி - அவந்த ஆட்டிக்கல



## வெங்காய வெடி உண்ட யானை பலி

வவுனியா, பாலமோட்டை பகுதியில் யானை ஒன்று நேற்றையதினம் சடலமாக மீட்கப்பட்டுள்ளது.
வவுனியா, பாலமோட்டை, ஊரல்குளத்தில் யானை ஒன்று இறந்து காணப்பட்டதை அவதானித்த ஊர் மக்கள் ஓமந்தை பொலிஸாருக்குத் தகவல் வழங்கினர். இதனையடுத்து ஓமந்தைப் பொலிஸாரும், வனஜீவ ராசிகள் திணைக்களமும் சம்பவ இடத்துக்குச் சென்றதுடன், வனஜீவராசிகள் திணைக்கள வைத்திய அதிகாரியால் யானை இறந்ததற்குரிய காரணம் தொடர்பாக மருத்துவப் பரிசோதனை செய்யப்பட்டது. இவ் மருத்துவ அறிக்கையின் படி ஐந்து வயதுடைய யானை வெங்காய வெடியை உண்டதனால் வாயில் ஏற்பட்ட காயம் காரணமாக உணவு உண்ண முடியாமல் இறந்துள்ளது எனத் தெரியவந்துள்ளது. இந்த யானை 7 நாட்களுக்கு முன்னர் இறந்திருக்கலாம் என தெரிவிக்கப்படுகின்றது. (உ)

## முதலமைச்சருக்கு மகஜர்

'மன்னாரின் எழுச்சி அதுவே எங்களின் முயற்சி' எனும் கருப்பொருளில் மன்னார் மாவட்ட தமிழமுது நண்பர்கள் சேகரித்த கையெழுத்துக்கள் அடங்கிய மகஜர் வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் உள்ளிட்ட முக்கியஸ்தர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளது.
இந்தக் கையொழுத்து வேட்டை கடந்த 2ஆம் திகதி ஆரம்பமாகி நிறைவடைந்துள்ளது. மன்னார் மாவட்டத்துக்கு வரவேற்பு கோபுரம் அமைக்கப்பட வேண்டும், மன்னார் மாவட்டத்துக்கு மணிக்கூட்டுக்கோபுரம் அமைக்கப்பட வேண்டும், மன்னார் மாவட்டத்துக்கு மின் சமிஞ்ஞை விளக்குகள்பொருத்துதல், மன்னார்பொது நூலகத்தைச் சிறப்பாக உருவாக்குவதோடு, கிராமப் புறங்களில் உள்ள நூலகங்களை தரமுயர்த்த வேண்டும், மாவட்டத்தில் பல் கலைக்கழகம் ஒன்றை உருவாக்குதல் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து குறித்த கையெழுத்து சேகரிக்கும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டது.
அதேபோல் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், மன்னார் மறைமாவட்ட குருமுதல்வர் அன்ரனி விக்டர் சோசை, மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் எம்.வை.எஸ்.தேசப்பிரிய ஆகியோருக்கும் இந்த மகஜர் கையளிக்கப்பட்டுள்ளது. (உ)

## வரிக்குறைப்பு மகிழ்ச்சி



இணையத் தளத்துக்காக அறவிடப்பட்ட வரி குறைக்கப்பட்டமைக்கு மகிழ்ச்சி தெரிவிப்பதாக இணையத் தள ஊடகவியலாளர்கள் தெரிவித்துள்ளனர்.
இதேவேளை, இந்தக் கட்டணத்தை இலகுவாகச் செலுத்தக் கூடிய வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுக்குமாறும் இணையத் தள ஊடகவியலாளர்கள் கேட்டுக்கொண்டனர். அரச தகவல் திணைக்களத்தில் இன்று காலை நடைபெற்ற செய்தியாளர் மகாநாட்டில் இணையத் தள ஊடகவியலாளர்கள் இவ்வாறு அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்தனர்.
இவ்வாறான வரி குறைப்பு நடவடிக்கையின் மூலம் தமது தொழில் துறையை முன்னெடுக்க வசதி கிட்டுவதுடன், எதிர்காலத்தில் ஒழுக்க விதிமுறைகளுடன் இத்தொழில் துறையை இலகுவாக முன்னெடுக்கக்கூடியதாக இருக்கும் என்றும் இவர்கள் சுட்டிக்காட்டினர். (உ)

## 22 பேரால் முடியாததை 6 பேர் செய்கிறோம்

ஜே.வி.பி.யில் ஆறு நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருந்து பல விடயங்களைச் செய்யும் போது 22 நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சில பிரச்சினைகளைத் தீர்க்கமுடியாமல் இருப்பது கவலைக்குரியது என ஜே.வி.பியின் பொதுச்செயலாளரும் கோப் குழுவின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சுனில் ஹெந்துநெத்தி தெரிவித்தார்.
ஊழல் அற்ற மோசடிகள் அற்ற நாடு ஒன்றை கட்டியெழுப்ப அனைவரும் தங்களது ஒத்துழைப்பை வழங்க வேண்டும் எனவும் அவர் வேண்டுகோள்விடுத்தார். நேற்று மட்டக்களப்புக்குப் பயணம் செய்த அவர் நேற்று மாலை மட்டக்களப்பு மாவட்ட தமிழ் ஊடகவியலாளர்கள் ஒன்றியத்தையும் சந்தித்தார். இந்தச் சந்திப்பின்போது மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள தற்போதைய நிலைமை நல்லாட்சிக்கு முன்னர் இருந்த செயற்பாடுகள், அதன் பின்னரான நிலைமைகள் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினருக்குத் தெளிவுபடுத்தப்பட்டது.
இதன்போது, மட்டக்களப்பு மாவட்டத்தின் நிலைமைகள் தொடர்பில் தமது கவனத்துக்கு இதுவரையில் கொண்டு வரப்படவில்லையென தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் இனிவரும் காலங்களில் தாம் இது தொடர்பில் பூரண கவனம் செலுத்துவதாகவும் இதற்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் தமக்கு ஆதரவளிக்கவேண்டும் எனவும் தெரிவித்தார். (உ)

## ஆட்கடத்தல் – தமிழருக்கு 18 வருட சிறைத் தண்டனை

'சன் சீ கப்பலில் ஆட்களைக் கடத்தினார் என்று குற்றம் சாட்டப்பட்டுள்ள தமிழிருக்கு 18 வருடச் சிறைத் தண்டனை வழங்கப்பட வேண்டும் என கனேடிய சட்டத்துறை கோரியுள்ளது.
தாய்லாந்தில் இருந்து 492 இலங்கைத் தமிழர்களுடன் சட்டவிரோத பயணத்தில் ஈடுபட்டிருந்த 'சன் சீ' என்ற கப்பல் 2010 ஆண்டு கனடாவின், பிரிட்டிஷ் கொலம்பியாவில் நங்கூரமிட்டது. இந்த ஆட் கடத்தலுடன் தொடர்பு கொண்டவர் என உறுதிப்படுத்தப்பட்டதையடுத்து, பயணியாக அந்தக் கப்பலில் பயணித்த குணரொபின்சன் கிறிஸ்து ராஜா என்பவருக்கு முன்னதாக தண்டனை வழங்கப்பட்டது. எனினும், அதனை ஆட்சேபித்து, அவர் தாக்கல் செய்த மனு மீதான விசாரணைகளின் முடிவிலும் அவர் மீதான குற்றம் நிரூபிக்கப்பட்டுள்ளது.
இந்த நிலையில், ஏற்கனவே 6 வருடங்கள் சிறையில் அடைக்கப்பட்டிருந்த அவர், தீர்ப்பு வழங்கப்பட்டால் மேலும் 11 வருடங்கள் சிறையில் இருக்க வேண்டிய நிலை ஏற்படும் என தகவல்கள் தெரிவிக்கின்றன. (உ)

## மண்சரிவு எச்சரிக்கை



நாட்டின் தென்பகுதியில் நிலவுகின்ற அதிக மழை காரணமாக குகுலே கங்கையின் வான்கதவு ஒன்று திறக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக குகுலே கங்கைக்கு அருகில் தாழ்நிலப் பகுயில் வசிக்கின்ற மக்கள் அவதானமாக இருக்குமாறு இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் கூறியுள்ளது.
அதேவேளை, புளத்சிங்கள மற்றும் களுத்துறைப் பிரதேசங்களிலுள்ள மக்களும் அவதானமாக இருக்குமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. இதேவேளை, இரத்தினபுரி, நுவரெலிய மாவட்டங்களுக்கு மண்சரிவு அபாய அச்சுறுத்தல் இருப்பதால் அப்பிரதேசங்களில் உள்ள மக்கள் அவதானமாக இருக்குமாறும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.
மேல் கொத்மலை, கெனியன், மவுஸ்ஸாக்கலை, காசல்ரீ போன்ற நீர்தேக்கங்களின் நீர்மட்டமும் சடுதியாக உயர்ந்துள்ளது. இதனால் நீர்தேக்கங்களை அண்டிய பிரதேசங்களில் வாழும் மக்களை மிகுந்த அவதானத்துடன் செயற்படுமாறு பொலிஸார் கேட்டுக்கொள்கின்றனர். (உ)

## நெடுந்தீவு வைத்தியசாலையில் வைத்தியரின்றி மக்கள் அவதி

நெடுந்தீவு வைத்தியசாலையில் அடிக்கடி வைத்தியர் இன்றிக் காணப்படுவதால் இந்தப் பிரதேசத்தில் உள்ள சுமார் ஐயாயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் மருத்துவ தேவைகளைப் பெறுவதில் சிரமங்களை அனுபவித்து வருகின்றனர்.
மேற்படி வைத்தியசாலை அண்மையில் தரம் குறைக்கப்பட்டுள்ளதுடன், இதற்கான அடிப்படை வசதிகளை ஏற்படுத்துவதில் வடக்கு மாகாண சுகாதார அமைச்சு பொறுப்பற்ற விதத்தில் நடந்துகொள்வதாக இப்பிரதேச மக்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.
கடந்த வாரம் முதல் வைத்தியர்கள் எவரும் இல்லாத நிலையில் குறித்த வைத்தியசாலை காணப்படுகின்றது. கடமையிலிருந்த இரண்டு வைத்தியர்களும் சென்றுள்ளமையால் வைத்தியர் அற்ற நிலை காணப்படுகின்றது.
எனினும், கடந்த ஞாயிற்றுக்கிழமை முதல் ஊர்காவற்றுறையில் இருந்து வைத்தியர் ஒருவரை தற்காலிகமாக நியமித்துள்ளனர். வேலணைச் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் கீழ் உள்ள மேற்படி வைத்தியசாலையில் கடமையில் இருந்த தாதியரும் விலகிச் சென்றமையால் தாதியர் அற்ற நிலையும் காணப்படுகின்றது.
இதேவேளை, மகப்பேற்றுவிடுதி மற்றும் ஏனைய கட்டடங்களும் மிகமோசமாகச் சேதமடைந்து காணப்படுவதுடன், சாதாரண மருத்துவ உபகரணங்களும் அற்ற நிலை காணப்படுகின்றன.
இந்தப் பகுதியிலுள்ள மக்கள் தமது மருத்துவத் தேவையைப் பூர்த்தி செய்வதாயினும் நெடுந்தீவிலிருந்து குறிகாட்டுவானுக்குப் படகில் சென்று, அதன்பின்னர் யாழ்ப்பாணத்துக்குச் செல்லவேண்டும்.
ஆகவே, நெடுந்தீவு மக்களினுடைய தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில்மேற்படி வைத்தியசாலையின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்து நிரந்தர வைத்தியர்களை நியமித்துத் தருமாறு இந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (உ)

## நாளை நாளும் கோளும்

20.08.2017 ஞாயிற்றுக்கிழமை ஏவிளம்பி வருடம் ஆவணி மாதம் 04 ஆம் நாள்

சதுர்த்தசி பி.இ 02.36 வரை | பூசம் மாலை 06.18 வரை | சித்தயோகம்
இராகுகாலம் 04.35-06.05 | சுபநேரம் 09.05-10.35 | எமகண்டம் 12.05-01.35

| மேஷம் | ரிஷபம் | மிதுனம் | கடகம் | சிம்மம் | கன்னி | துலாம் | விருச்சிகம் | தனுசு | மகரம் | கும்பம் | மீனம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| கவனம் | கீர்த்தி | நிம்மதி | கவலை | வீண்செலவு | இரக்கம் | வரவு | தெளிவு | பாராட்டு | வேதனை | சோர்வு | நன்மை |

எதிரொலி
Ethiroli

## அந்த நாள் ஞாபகம்.....!




**1895.08.19**

கொழும்பில் தலைமை அஞ்சல் அலுவலகம் திறக்கப்பட்டது.

# சிறையில் முருகன் ஜீவசமாதிக்கு போராட்டம்



ஜீவசமாதி அடைய அனுமதிக்கக் கோரி, முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கின் குற்றவாளி முருகன், வேலூர் சிறையில் உண்ணாவிரதப் போராட்டத்தைத் தொடங்கியுள்ளார்.

துறவி ஆடைகளுடன் வேலூர் ஆண்கள் மத்திய சிறைச்சாலையில் தண்டனைக் கைதியாக இருக்கும் முருகன். சிறைத்துறை தலைவருக்கு, கடந்த மாதம் மனுவொன்றை, வேலூர் சிறை அதிகாரிகள் மூலம் அனுப்பியிருந்தார். அம்மனுவில், கடந்த 25 ஆண்டுகளுக்கும் மேலாக, சிறைத் தண்டனை அனுபவித்துவரும் நிலையில், தனது விடுதலை கேள்விக்குறியாகியுள்ளது.

இதனால்சிறை வாழ்க்கையை வெறுப்பதாகவும் ஜீவசமாதி அடைய அனுமதிக்க வேண்டும் என்றும் தெரிவித்திருந்தார்.

இக்கோரிக்கையை வலியுறுத்தி, கடந்த மாதம்17ஆம் திகதி முதல், சிறையில் வழங்கப்படும் உணவை சாப்பிட மறுத்து, பழங்களை மட்டும் சாப்பிட்டு வந்தார். அவர் அளித்த மனுவின் மீது, கடந்த ஒரு மாதமாக எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

இந்நிலையில், வேலூர் சிறைச்சாலையில், வடக்கு நோக்கி அமர்ந்து உண்ணாவிரதப் போராட்டத்தை, முருகன், நேற்று தொடங்கியுள்ளார். பழங்களை சாப்பிட மறுத்துதுடன், தண்ணீரை மட்டும் குடிக்கிறார் என்று கூறப்படுகிறது. ஜீவசமாதி அடைவது குறித்து, தமிழக முதலமைச்சருக்கு கோரிக்கை மனுவையும் அளித்துள்ளார். (எ)

# தான் வைத்த பொறியில் சிக்கிய ஒருவர் மரணம்

வெத்தகல பகுதியில், வன விலங்குகளை வேட்டையாடுவதற்காக பொறித் துப்பாக்கியொன்றை வைத்திருந்த நபர், அதே பொறித் துப்பாக்கி வெடித்ததால் நேற்று உயிரிழந்துள்ளார்.

படுகாயங்களுக்கு உள்ளான நபர், பிரதேசவாசிகளினால், கெபெதி கொல்லாவ வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட போதும், சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

மொரகொடையை வசிப்பிடமாகக் கொண்ட லியோனல் ராஜபக்ச (வயது-39) என்ற இரண்டு பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளார். இதற்கு முன்னரும் குறித்த நபர்இதேபோன்று பொறியில் சிக்கி உயிர்பிழைத்தமை குறிப்பிடத்தக்கது. (உ)

# நினைவு நாள்




மட்டக்களப்பு, சித்தாண்டியில் காணாமல்போன 62 பேரின், 27ஆவது ஆண்டு நினைவு தினம், இன்று சனிக்கிழமை அனுஷ்டிக்கப்பட்டது. 1990ஆம் ஆண்டு காலப் பகுதியில் அசாதாரண சூழ்நிலை காரணமாக தொடர்ச்சியான சுற்றிவளைப்புகள் நடந்து கொண்டிருந்த வேளையில் சித்தாண்டி ஸ்ரீ சித்திர வேலாயுதர் பேராலய நலன்புரி முகாமில் தஞ்சம் புகுந்த இளைஞர்களையும் யுவதிகளையும் மற்றும் கூலித் தொழிலாளிகளையும் சுற்றிவளைப்பு மூலம் மொத்தமாக 62 பேரை படையினர் வாகனத்தில் ஏற்றிக்கொண்டு சென்றிருந்தனர். அவ்வாறு ஏற்றிக்கொண்டு சென்றவர்கள் முறக்கொட்டாஞ்சேனை இராணுவத்தினர் முகாமுக்குக் கொண்டு செல்லப்பட்ட பின்னர் காணாமல் ஆக்கப்பட்ட, இன்றுடன்27 வருடங்கள் கடந்துள்ளன. (எ)

**நாமல்...** (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அழைப்பாணை விடுக்குமாறு, பொலிஸ் நிதிக்குற்ற விசாரணைப் பிரிவு, நீதிமன்றத்திடம் நேற்று வேண்டுகோள் விடுத்தது. இந்த கோரிக்கையை பரீசிலித்த போதே, கொழும்பு மேலதிக நீதவான் சந்தன கலங்க சூரிய இவ்வாறு தெரிவித்தார். மேலும், நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச, தனக்கு மிரட்டல் விடுத்த சம்பவம் தொடர்பில், உப பொலிஸ் அதிகாரி பொலிஸ்மா அதிபரின் கவனத்துக்கு கொண்டு வந்துள்ளார்.

பொலிஸ் நிதிக்குற்ற விசாரணைப் பிரிவின் தொகுதி இலக்கம் 7 இல் பணிபுரியும் அதிகாரி ஒருவருக்கே இவ்வாறு மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளது. பொலிஸ் நிதிக்குற்ற விசாரணைப் பிரிவு வளாகத்தில் இச்சம்பவம் நடைபெற்றுள்ளதாகவும், இதன்போது மகிந்த ராஜபக்ச உடனிருந்தாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

விசாரணை ஒன்றுக்காக கடந்த புதன்கிழமை ரோஹித ராஜபக்ச பொலிஸ் நிதிக் குற்ற விசாரணைப் பிரிவுக்கு ஆஜராக வந்த சந்தர்ப்பத்திலேயே, நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச குறித்த அதிகாரிக்கு இவ்வாறு மிரட்டல் விடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (எ)

**இந்தியப்...** (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தினர். குறித்த அதிகாரிக்கு தலைமை அதிகாரியாக யாழ்ப்பாணத்தில் பணியாற்றிய இராணுவ அதிகாரி ஒருவரது நினைவுத் தூபியிலேயே அஞ்சலி செலுத்தப்பட்டுள்ளது. (உ)

**பிரபாகரனுடன்...** (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கை ஜனாதிபதியான சந்திரிகாவே வழங்கியிருந்தார்.

நாங்கள் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த பிரதேசத்தில் பிரபாகரனைச் சந்தித்தோம். அதற்காக நாங்கள் உலங்குவானூர்தியில், சென்றிருந்தோம்.

தாழ்வாகவும், மேலுயர்ந்தும் பறந்து சென்றது அது. மலைகளாக இருந்திருந்தால் பயங்கரமாக இருந்திருக்கும். நாங்கள் செல்வதை இலங்கை இராணுவத்தினரோ, விடுதலைப் புலிகளோ அறிந்திருக்கவில்லை. அதனால் அவர்கள் இலகுவாக சுட்டு வீழ்த்தக் கூடும்.அங்கு நாங்கள் பிரபாகரனைச் சந்தித்தோம். அது ஒரு நல்ல சந்திப்பு. அமைதி முயற்சிகளில் அவர்கள் ஆர்வம் கொண்டிருப்பதை உறுதிப்படுத்தினர்.

தமிழர்கள் மத்தியில் பிரபாகரன் மகத்தான நிலையை நிலையில் இருக்கிறார் என்பதைப் புரிந்து கொள்ள முடிந்தது. அந்த நேரத்தில் அவர் கடவுளாக, படைப்பின் மூலமாக, மீட்பராக போற்றப்பட்டார்” என்றும் அவர் கூறியுள்ளார். (எ)

**சு.க.- ஐ.தே.மு...** (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டுள்ள நிலையில் அவ் விடயம் தொடர்பிலும், தேசிய அரசின் ஒப்பந்தக் காலம் முடிவடைந்துள்ள நிலையில் அடுத்த கட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வது தொடர்பிலும், அமைச்சர்கள் மீதான நம்பிக்கையில்லாப் பிரேரணைகள் தொடர்பிலும் இச் சந்திப்பின்போது ஆராயப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இச் சந்திப்பில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கலந்துகொள்வது குறித்து இன்னமும் முடிவாகியிருக்கவில்லை என குறிப்பிடப்பட்டுள்ளபோதும் ஐக்கிய தேசிய முன்னியில் அங்கம் வகிக்கும் கட்சித் தலைவர்களுடன் ஐ.தே.க அமைச்சர்கள் சிலரும் பங்குபற்றவுள்ளனர் என தகவல்கள் வெளியாகியுள்ளன. (எ-09)

**டிப்பர்...** (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிகழ்ந்துள்ளது. சம்பவத்தில் மட்டுவில் வடக்கு, முத்துமாரியம்மன் கோவிலடியைச் சேர்ந்த 56 வயதுடைய கதிர்காமு சிவராசா என்ற வயோதிபரே உயிரிழந்துள்ளார்.

சடலம் சாவகச்சேரி வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரிப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ-4)

**படையினர்...** (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அண்மையில் குறிப்பிட்டிருந்தது. இந்நிலையிலேயே பணத்தினை வழங்கி காணிகளை மீட்க மீள்குடியேற்ற அமைச்சு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. எதிர்வரும் 29 ஆம் திகதிய அமைச்சரவைக் கூட்டத்தின்போது இதற்கான அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பிக்கப் படவுள்ளது. அதற்கான அனுமதி கிடைத்ததும் காணிகளை விடுவிப்பது குறித்த அடுத்த கட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளவுள்ளதாக அமைச்சுத் தகவல்கள் தெரிவித்தன. (எ-9)

**20 க்கு...** (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தாககக் குறிப்பிட்ட ஜே.வி.பி யின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான விஜித ஹேரத் அதற்கு அனைத்துக் கட்சிகளினதும் ஆதரவு அவசியம் எனவும் குறிப்பிட்டுள்ளார். (எ-09)

**பந்துல...** (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்னிடம் விசாரணை நடத்த வேண்டியுள்ளதால் நேரம் ஒதுக்கித் தருமாறு குற்றப் புலனாய்வுப் பிரிவு கேட்டுக் கொண்டது. அதற்கென கடந்த திங்கட்கிழமை நேரம் ஒதுக்கிக் கொடுத்தேன். சபாநாயகரிடம் அனுமதி பெறவேண்டியுள்ளதனால் அனுமதி பெற்று புதன் கிழமை விசாரணை நடத்துவதற்கு வருகை தருவதாக அவர்கள் குறிப்பிட்டிருந்தனர். எனினும் எனது பாதுகாப்புத் தரப்பை தொடர்பு கொண்ட குற்றப்புலனாய்வுப் பிரிவினர் எதிர்வரும் 25 ஆம் திகதி விசாரணை நடத்துவதற்கு வருகை தருவதாகக் குறிப்பிட்டுள்ளனர் எனத் தெரிவித்துள்ளார். (எ-212)



**தேவி ஜோதிட நிலையம்**
உலகப் பிரசித்திபெற்ற ஜோதிடர்
**பண்டித் அசோக்**
துல்லியமாகக் கணித்து
பார்க்கப்படும் விடயங்கள்



கைரேகை, நாம நட்சத்திரம், கல்வி, தொழில், வியாபாரம் விருத்தியடைதல், லக்ஷ்மி வசீகரம், திருமண யோகம், குழந்தை பாக்கியம், கணவன் மனைவி ஒற்றுமையின்மை, வாஸ்து சாஸ்திரம், வீட்டில் வதிவிட பிரச்சினை, பயண எதிரிகள், கண் திருஷ்டி, கஷ்ட நஷ்டங்கள், நீதிமன்ற வழக்குகள், வாகனம் பொருத்தம், பெண் பிள்ளைகள் பெற்றோருடன் குடும்பத்தில் ஒற்றுமையாக நிலைத்திருத்தல், பிரிந்தவர்கள் ஒன்றுகூடுதல், பில்லி சூனியம் வெட்டப்படும், பாலியல் பிரச்சினை, அதிர்ஷ்ட இலாபம் கிடைத்தல், ஆயுள்வேத மருந்துகள் பெற்றுக்கொள்ளலாம். இவை அனைத்தும் துல்லியமாகக் கணித்துக் கூறப்படும்.

100%
ஒருமுறை எங்களிடம் வாருங்கள்
நல்ல பலனைப் பெற்றுக்கொள்ளலாம்.
எல்லா மதத்தவர்களும் வரவேற்கப்படுகின்றனர்.

Time: 7.00 a.m. to 7.00 p.m.
Tel.: 077 4160789
கே.கே.எஸ். றோட்,
சந்தை வீதி தெற்கு,
சுன்னாகம்.

இப்பத்திரிகை சிவஞானம் ஜெயானந்தனால் பருத்தித்துறை வீதி, 5ஆம் கட்டை, கோப்பாய் மத்தி, கோப்பாய் என்ற முகவரியிலுள்ள நாவலர் அச்சகத்தில 19.08.2017 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.